Y15
M99
114871

# மாதர் ஹிதோபதேசம்.

1137

---

தென் இந்தியா பிராம்மசமாஜத்தாரால்

பிரசுரிக்கப்பட்டது.

OF THE REGISTRAR
3 1899
MADRAS

First Edition 500 Copies.

PRINTED BY C. PONNUSAWMY PILLAI AT THE

BRAHMO ORPHAN ASYLUM PRESS,

MADRAS.

1899.

Y15
M99
130
2-1899
1139
114891

# அறிவிப்பு.

சென்னை செங்கான் கடைக்கடுத்த அண்ணாபிள்ளை வீதி 97-வது நெம்பர் பிரம்மோபாஸனமந்திரத்தின் கண் பிரதிமாதம் குறிக்கப்படும் தினத்தில் ஸ்ரீமதிகள் சபைகூட்டப்படும் அச்சமயத்தில் பகவத்கீர்த்தனைகள் சங்கீதகருவிகள் சகிதமாக பாடுவதன்றியில் சோதரிகளால் தெலுங்கிலும், தமிழிலும் உபன்னியாசமும் செய்யப்படும். ஆரியசோதரிகள் ஒவ்வொருவரும் அச்சமயம் விஜயம் செய்து சிரவணானந்த மடையப்பிரார்த்திக்கப்படுகின்றது.

The B. O. A. Press,—Madras.

"தென் இந்திய பிராம்மணசமாஜத்தின் 34-வது வருஷோத்ஸவ காலத்தில் 1898ஆம் டிசம்பர்மீ 30உ லை சமாஜமண்டபத்தில் ஸ்ரீமதிகள் சபையில் சௌபாக்கியவதி மீனாட்சி அம்மாள், வாசித்த உபந்நியாஸம்."

---

எனதருமை அன்புள்ள சகோதரிகளே.

மானிட ஜன்மத்தைப்பெற்ற நமக்கு இயற்கையில் பலவித வெழுச்சிகள் உண்டென்றும் அவ்வெழுச்சிகள் இனத்திலும் பலத்திலும் பேதப்பட்டிருப்பதுமன்றி யோக்கியத்திலும் தாரதம்மியமுடையனவென்று சென்ற அக்டோபர்மீ 2உ நடந்த உபந்நியாசத்தால் கண்டோமல்லவா? அவற்றில் உயர்ந்த வகுப்பைச் சார்ந்த தயிரியம், இரக்கம், அன்பு, முதலியவற்றில் தலைமை பெற்றுள்ளது அன்பு.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு."

என்று திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய குறளின் பொருள்—

அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளாலும் தமக்கேயுரியர். அன்புடையார் எல்லாப்பொருள்களாலுமல்லாமல் தம்முடம்பாலும் பிறர்க்குரியர் என்பதாம்.

இச்செய்யுளில்கண்ட சிறந்த அன்பின் அழகை பலநாட்டிலும் புருஷோத்தமர்களாக உதித்த லோகோபகாரிகளான சிறந்த ஞானிகளிடத்தும், பெற்ற தாய்மார்களிடத்தும், காணலாம். பிறரால் தமக்கு நன்மைகிடைக்கவேண்டு மென்றெண்ணுமல் மனமவர்க்கு உபகாரிகளாய் பிறருக்குநன்மை செய்கிறவரே பரோபகாரிகள் பெரியோர். தம்மையடுத்து பலனை எதிர்பாரச் செய்யுந்திறமையிருந்தும் செய்வதற்கு மனமில்லா

ழுவிருப்பவர் பலருளர் என்று நமக்கு நன்றாய்த் தெரிந்தும், பெரியார்கள் தங்களை யொருவர் வேண்டாமலே தங்களா லுதவியாகற்றையும் செய்வதுடன் செய்யும் விஷயத்தில் உண்டாகும் பிரயாசைகள் பல உளதானுலும் அவைகளை ஒரு பொருட்டாக எண்ணுமல் வேண்டுமானுல் தம்முயிரையுங்கொடுக்க இசைவார்கள். இப்படிப்பட்ட உத்தமர்களாயினோர் அருமை.

இரண்டாந்தரமாகிய மிஸ்ரம அன்பைக்கொண்டவர்களாலும், உலகத்தில் சத்திரங்கள், சாவடிகள், குளங்கள், தோப்பு, துரவுகள், சாலைகள், வித்தியாசாலைகள், வைத்தியசாலைகள், முதலிய அநேக தருமங்கள் உண்டாயிருக்கின்றன. இவற்றைச்செய்பவர்களுக்கு அவற்றால் ஏதோ ஒருபலன் இம்மையிலோ மறுமையிலோ தங்களுக்கு உண்டாமென்ற எண்ணம் இருந்தாலுமிருக்கலாம். அநேகர் இம்மையில் பெரும்புகழைக்கருதி தருமங்களைச் செய்பவர்களும் மற்றும் சிலர் சொர்க்கானுபவம் கிடைக்குமென்கிற எண்ணத்தினுற் செய்பவர்களாயிருப்பார்கள். அச்செய்கைகள் என்ன நோக்கத்தைக்கொண்டவையாயினும் அவை யாவும் அன்பின் செய்கைகளே. உலகில் அன்பென்பது இல்லாமற்போனுல் அதுநிர்குலைந்து பாழடையும். யாதொரு பிரதிப்பிரயோசனத்தையும் எதிர்பாராமல் நன்மை செய்வதையே சுபாவமாகக்கொண்ட சிறந்த பெரியோர்களைக்காணும்போது இவ்வித அருமையான குணம் அவர்கள் பெறுவதற்கு காரணமாயிருந்த [illegible] யாதெப்படி ஆகிறது. இவ்வழகிய பிரபஞ்சத்தை [illegible] அதில்நம்மை காட்டியதற்கு,

“அன்பைப் பெருக்கி எமதாருயிரைக் காக்கவந்த
வின்பப் பெருக்கே விறையே பராபரமே.”

என்று தாயுமானவர் சொன்னபடி பரமனுள்ளவினது அன்பே காரணமென்று நன்றாய் விளங்குகிறது. அவரது அன்பின் பெருக்கத்தாலேயே நாம் எல்லாவற்றையும்பெற்று சுகிக்கிறவர்களாயிருந்தும், ஏதோ ஒரு அல்பகுறை நேரிடும்போது எவ்வற்றையும் பறிகொடுத்தவர்கள்போல மனம்தளர்ந்து நம்

அன்பை சந்தேகிக்கிறவர்கள் போலாய்விடுகிறோம். சிறுபிள்ளைகள் தம் தாய்தந்தையர்மூலமாய் எல்லா நன்மைகளைப் பெற்றிருந்தாலும், தாம்கோரிய ஒருசிறுவிஷயம் தங்களுக்குகிடைக்காதபோது ஓலமிட்டு அழுவதுபோல, நாமும் யாதொரு குறைநேர்ந்தகாலத்தில் அக்குழந்தைகளைவிட விசேஷ அறிவையுடையவர்களாய் நடந்துகொள்வதில்லை. இதற்குக்காரணம் என்னவென்று சிந்தனைசெய்யுங்கால், நம்மில் பராமுகமும் சிறந்ததாகிய ஓர்பழக்கமின்மையும், வெளியாகின்றன. நம்மைச் சுற்றிலும் எப்பக்கமும் மேலும் கீழுமுள்ள ஈசனது அளவற்ற அற்புதச்செய்கைகளை கவனித்துப்பார்த்து களிக்கவும் ஒவ்வொருநன்மையை நாமனுபவிக்கும்போது அதுயாரிடத்துவந்தது என்கிற சிந்தனை யில்லாதவர்களாய் பழகிவிட்டோம். அக்கொடிய பழக்கத்தினுல் வனத்திற்சென்றும் மரத்தைக்காணவில்லையென்று சொல்வானைப்போல நம்மைச்சூழ்ந்து அபரிமிதமாய்க்கிடக்கிற அற்புதச்செயல்களையும் தினந்தோறும்நாம் இலவசமாய் அனுபவிக்கும் அளவற்ற நன்மைகளையும் மறந்திருக்கிறோம்.

ஏராளமாயுள்ள அற்புதச்செய்கைகள் இன்னவையென்று சற்று ஆலோசிப்போம்.

சிறு அணுமுதல் நாம்நிலைபெற்றிருக்கும் பூமி, அதின்மீது கவிந்துபரந்திருக்கும் ஆகாசத்தில் பிரகாசிக்கும் சந்திர, சூரிய நட்சத்திர அண்டகோடிகள் யாவும், அவ்வவற்றிற்கு நியமிக்கப்பட்ட கதியினின்று பிசகாமல் தமதுவேலையை செய்கின்றன. இப்பெரும்பூமியை சமுத்திரம் சூழ்ந்துகரையுமில்லாமல் தன்னைப்படைத்த பிரபுவின் பிரபாவத்தை கவனியாதிருக்கிற உலகத்தாரை ஓ செவிடர்காள்! நான்சொல்லும் அவனது பெரும்புகழைக் கேளுங்கள் என்று சொல்வதைப்போன்று தனது அலைகளாகிய கைகளை மோதிமோதி கோஷிக்கின்றது. தண்ணீர்ப்பந்தலொன்றில் பெருத்த யேனத்தில் ஜலத்தை சேகரித்துவைத்துக்கொண்டு அதிலிருந்து கேட்போர்க்கு ஜலம்வார்ப்பவனைப்போல உலகத்தைச் சூழ்ந்துள்ள நீர்நிறைந்த சமுத்திரமென்றபிரமாண்ட ஏனத்திலிருந்து மேகங்களென்ற தனது பல கைகளினுல் ஜலத்தைவாரி உலகங்கொண்ட பூமிமீது

ஒளியையும் சிறந்த ஆற்றலையுமுடைய சூரியன் வானி, மழைரூபமாய் வருத்துகிறான். வெப்பத்தைத் தணித்து பூமியைக்குளிர்ப்பித்து, தனதானியங்களை யுண்டுபண்ணி தானே முதற்றர சுயம்பாகியாக விருந்துகொண்டு, உண்டானவைகளை கனியச் செய்து உலகத்தாரை உண்டு களிக்கும்படி செய்கிறான். மழை பனி இவைகளால் குளிரில் வருந்தாதிருக்கும்படி பருத்தி முதலிய செடிகளும் ஆடுமுதலிய மிருகங்களும் நமக்கு உபகாரம் செய்கின்றன. பட்டுப்பட்டாடைகளால் அலங்கரித்துக்கொள்ளும்படி புழுக்கள் நமக்கு உதவிபுரிகின்றன. வீடு மாளிகைகளுக்குவேண்டிய மரங்களைத்தர, ஆகாயத்தை அளாவியதேக்கு முதலிய மரங்கள் வளர்கின்றன, வீடுகளை பரிமளிக்கச்செய்கிறதற்கு சந்தனம் அகில் முதலியவை உண்டாகின்றன. சிறந்த கனிகளைக்கொடுக்க மா பலா முதலிய திவ்வியமான மரங்கள் எத்தனையோயுண்டு. ரமணீயமான புஷ்பங்கள் கண்களையும் நாசியையும் உகக்கச்செய்கின்றன. அழகிய பறவைகள் தமது தீங்குரல்களால் அப்பனது புகழைப்பாடி நமது காதுகளுக்கு ஆனந்தமூட்டுகின்றன. பெருமலைகளின்மேல் பெய்கிற மழையானது திரண்டுருண்டு ஆறுகளாகி அவையுண்டாமிடத்தினின்று தொலைதூரங்களுக்குச்சென்று அங்கங்குள்ள பயிர்முதலியவை செழித்தோங்கி ஒன்றுக்கு ஆயிரமடங்குபலனைச்சொரிந்து ஆத்துமகோடிகளை பிழைப்பிக்கின்றன. இப்பரந்த உலகத்திற்கு தக்கதான ஓர்பெரிய மண்டபம்போல் நிற்கும் ஆகாசவெளியில் வயிரமணிகளால் இழைத்தாற்போன்று அமைந்திருக்கும் நட்சத்திரங்களின் மத்தியில் நாயகம்போன்று விளங்காநின்ற சந்திரன் உலகிருளையொழித்து தன்னொளிபரப்பி யாவரையும் களிக்கச்செய்வதினால், நாம்பலமுறை உற்றார் பெற்றாரோடு கூட மேல்மாடங்களிலோ சந்திரிகை காய்படும் இடங்களிலோ உட்கார்ந்துகொண்டு பண்டுபலகாரங்களோடு நிலாச்சாப்பாடு சாப்பிட்டு அகமகிழ்கிறோம். இவ்வாறாக கவிகளாலும் ஒன்றொன்றாய் எடுத்துரைத்து [illegible]வுபெறக்கூடாத அழகையும் எம்பெருமானது அன்பே பு[illegible]வுகொண்டு தோன்றிய சிருட்டியின் அற்புதக்காட்சிகளைக் கண்டும்,



“சோராக் தெய்வத்திருவருளா” லாகிய பூமியின்கண் ணா தாய்மார் வயற்றிலிருந்தபோது அங்கு நமக்கு வேண்டிய அன்னபானாதிகளை சோரூட்டி வெளிவந்தபிறகும், அமுதப்பாலானூட்டி வளரச்செய்து இந்நிமிஷம்வரை யாதொரு தீங்கும் நம்மை அணுகாது காத்தருளும் நித்திய, சுந்தர, மங்கள, ஸ்வரூபிணியுடைய, அன்பை சிந்தித்துப் பார்ப்போமானால்,

“கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினுங்
குளிர்தீம் புனற்கையள்ளிக்
கொள்ளுகினு மந்நீரிடைத் திளைத்தாடினுங்
குளிர்சந்த வாடைமடவார்
வந்துலவுகின்ற தென்முன்றி லிடையுலவே
வசதிபெறுபோதும் வெள்ளை
வட்டமதிபட்டப் பகற்போல நிலவுதர
மகிழ்போதும் வேலையமுதம்
விந்தைபெற வறுசுவையில் வந்ததெனவமுதுண்
ணும்வேளையிலு மாலைசந்தம்
வெள்ளிலை யுடைக்காய்விரும்பி வேண்டியவண்
ணம்விளையாடி விழிதுயிலினுஞ்
சந்ததமு நின்னருளை மறவாவரந்தந்து
தமியேனை ரக்ஷைபுரிவாய்
சர்வபரிபூரண வகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே.

என்று தாயுமான பெரியவர் பாடியதுபோல் நாமும் அவரது கருணையை மறவாதிருக்க பிரார்த்திப்போம். அன்றியில் நாம் உண்ணும் உணவிலும், அருந்தும் நீரிலும், உடுக்கும் உடையிலும், படுக்கும் அமளியிலும், சுருக்கிச் சொல்லவேண்டில் நாமனுபவிக்கும் எவற்றிலும், நமதுபிரபுவும் பரமதந்தையுமானவரது அன்பை நினைக்கபழகுவோமானால் அப்பழக்கத்தின் முதிர்ச்சியால் பரமவள்ளலிடத்து நமக்கு அன்புபெருகி பெரியோர்கள் அவனை கருணைக்கடலென்றும் ஆனந்தசொரூபனென்று பெயரிட்டழைத்தவாறு நாமும்சுவானுபவமாக உணரலாம் என்

பதற்கு சந்தேகமிராதென்று சொல்லத்துணிகிறேன். இவ்வித பழக்கத்தை சிறிதுகாலமாக நான் அநுசரித்து வருவதினாலே மேற்சொன்னவாறு சொல்ல துணிவு பிறந்தது. இப்பழக்கத்திற்குமுந்தி அற்பமென்று எண்ணிய உணவே இப்போது அமிர்தம்போலிருக்கிறது. எதிலும் திருப்தியுண்டாகிறதைக் காண்கிறேன். முந்தி பெருமையற்றுத் தோன்றிய கருமம் இப்போது புனிதமாகத் தோன்றுகிறது. சுகத்தைத்தரும் விஷயத்தில் நான் ஒருவேளை உணக்கிப்படியிருக்கலாம், துக்கம்வந்தகாலத்திலும் இப்படிக்கண்டாயாவென்பீர்கள். மேற்குறித்த நம்பழக்கத்தால் சுகத்தில் சுகம் பெருகுவதுபோல் துக்கத்தில் துக்கத்தின்கொடுமை வெகுசாந்தமாகி சகிப்பதற்கு மனம்வெகு இலேசில் இசைகிறது. எவ்வளவுபெரிய உபகாரங்களை நிமிஷந்தோறும் இலவசமாய்ப் பெறுகிறோம். அடைந்தும் அவர்மாட்டு நன்றியில்லாமல் அவரது கட்டளைக்கு இணங்கிடக்காமல் எத்தனை தடவை முரண்டிக்கொண்டோம். இவ்வித துரோகிகள் இன்னும் அதிக சிக்ஷைக்கு உள்ளாக வேண்டியவர்களாயிருக்க இவ்வளவோடுபோனது அவரது காருண்ணியமே. இன்னும் அதிகமாக வந்தாலும்வரட்டும் என்கிற எண்ணம்பிறக்கிறது. பல துறைகளிலும் விவேகத்தைப்புகட்டி அறிவை விசாலிக்கச்செய்துகொண்டு ஞானப்பயிராகி மனத்தூய்மையடைந்து அவரிடத்திலும் அவர்மக்களிடத்திலும் அன்புசெய்வதைவிட்டு உண்டு உறங்குவதே போந்தநெறியென்றிருக்கிற நம்மை துக்கங்களென்கிற அவரது திவ்விய தூதர்களையனுப்பி நம்மைசீர்படுத்துவது அவரது தூய்மைத்தன்மைக்கும் நீதியோடியைந்த அன்பிற்கும் ஒத்ததேயன்றி அன்பில்லாமையினாலென்று சொல்வது நமது அறியாமையின்பாலதாகும். அறிவின் விளக்கத்தைப் பெறாத சிறுமியர் தங்களுக்கு துன்பஞ்செய்யும் சிற்றுண்டிகளை விரும்பி இன்பமிதே தொழிலாகக் கொள்கிறார்கள். அறிந்த தாய்தந்தையர் அவர்களுக்கு கசப்பாகியமருந்தை பலாத்காரமாய் யூட்டி தேகசவுக்கியத்தை யுண்டுபண்ணுகிறார்கள். இவ்வாறுசெய்யும் தாய்தந்தையருக்கு தம்மக்கள்மீது அன்பில்லையென்று சொல்லலாகுமா? இதுபோன்றதல்லவா நமது பரமபிதாவி



னால் அனுப்பப்பட்ட துன்பங்கள், அவற்றை துன்பமென்பது அநாகரிகம். சிற்றின்பச் சேற்றிலழுந்திகிடக்கும் நம்மை கைதூக்கி கரையேற்றி நித்தியவீட்டிக்கு அருகர்களாக்குவிக்கும் அவரது திவ்வியமான கருணைச்செயல்கள் என்று சொல்வதே தகுதி.

நமக்கு என்னகுறைகளிருந்தாலும் அவற்றிற்குநாம் ஆளாகாமலும் [illegible] நமது வாழ்நாளை இனியதாக்கிக்கொள்வதற்கு திறமையான சாதனம் நம்மையுண்டாக்கின பரமபுருஷனிடத்து அன்பைப்பெறுக்குவதே. மேலே எடுத்துக்காட்டப்பட்ட உபாயவழியால் அவரிடத்து நாம் அன்பைப் பெறுவோமானால் நித்திய தரித்திரர்களாயிருந்த போதிலும் நமது அகமகிழ்ச்சிக்கு ஏகசக்கிராதிபதியின்சந்தோஷமும் ஈடாகாது என்றுசொல்ல எனக்குத்துணிவு பிறக்கிறது. அவரிடத்து அன்புபெருகப்பெருக அவர்மக்கள்மீதும் அன்பு பெருகுமென்பதும் அநுபவசித்தமென்று ஏற்படுகிறது. உபகாரத்தை பெறும் விசுவாசமுள்ள ஓர் ஊழியன் தனது எசமானது கட்டளைகளை சிரத்தையோடு நிறைவேற்றுவதுமன்றி எசமானுடைய சொத்துகளுக்கு தன்னால்கூடியவரையில் யாதொரு தீங்கும் வராமல் பார்ப்பது சகஜமாயிருக்கிறது. இவ்வாறே நமது பரம தந்தையினிடத்திருந்து இலவசமாய் ஒவ்வொரு நிமிஷமும் பெறும் அளவற்றநன்மையை நாம்மனப்பூர்வமாக நினைத்து அவரிடத்து அன்பாற்கரைந்துருகுவோமானால், அவரது மக்களாகிய யாவரையும் சகோதரர் சகோதரிகளென்றெண்ணி அவர்களுக்கு நம்மாற்கூடிய நன்மை செய்வதற்கு நமதுமனம் இசையாமலிருப்பது அசாத்தியம். இழிந்தபிறப்பினதாய நாயன்றோ எசமானிடத்தில் தான்பெற்றநன்மையைக்கருதி அவனிடத்து அன்புபாராட்டி அவனது நோக்கமறிந்து அவனுக்கேற்பட்ட ஊழியத்தைச் செய்கிறது. ஈசனது பிள்ளைகளென்ற பெரும் பாக்கியத்தைக்கொண்ட நாம் அவரது நோக்கைத் தெரிந்துகொண்டு அதற்கிசைய நடப்பதல்லவா நமக்கழகு "இவையளவு முபகாரமல்லால் வேறொன்றிபக்கா திக்குணைக்கடவே" என்று தாயுமானவர் சொல்லியவண்ணம் நமதுபணது செய்

கை சதா உபகாரச்செய்கையா யிருப்பதினின் றுவரது திருவுளப் பாங்கிற் கிசைந்து நாம் பரஸ்பர உபகாரிகளாக விருப்பதே நமது கடமை.

ஈசனிடத்து நமக்குள்ள அன்புபெருக இங்கொரு நலம் நமக்கு சித்திக்கிறது. "எண்ணித்துணி" என்றவாறு நாம்செய் காரியத்தின் சாதக பாதகங்களை, நன்றாய் ஆராய்ந்து செய்யத்தக்கதென்று தோன்றுவதை செய்ய ஆரம்பித்தால் நன்மைக் குத்துணை செய்ய சுவாமியிருக்கிறாரென்கிற நினைப்பு நமக்கு ஊக்கமூட்டி விடாமுயற்சியுடன் தொடுத்த காரியத்தை முடிக்கும்படி செய்கிறது. செயலற்றிருக்க வொட்டாது. பயத்தை நீக்கி தாயுமானவர் பாடியபடி,

"எல்லாமறிந்தவரு மேதுமறியாதவரு
மில்லையெனு மிவ்வுலகமீ
திதுமறியா தவனெனப் பெயர்தரித்துமிக
வேழைக்கு ளேழையாகிக்
கல்லாதவறிவிற் கடைப்பட்டநானென்று
கைவிடா துண்மைஞானக்
கற்பித்த நின்னருளினுக் கென்னகைம்மாறு
காட்டுவேன் குற்றேவலோ
னல்லார்ந்த மேனியொடு குண்டெட்டபிறையெயிற்
றுபாத வடிவமான
வந்தகாலியொரு பகட்டாற் பகட்டவே
தடாதடா காசும்மாற்
செல்லாதடா வென்று பேசவாயதுதக்க
செல்வமே சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவானதெய்வமே
தேசோமயானந்தமே."

என்றபடி எமனுக்கும் பயப்படாத தீரநெஞ்சத்தைப் படைப்போம்.

செய்யவேண்டியதைச் செய்யாமல் எல்லாம் ஈசனருளால் வருமென்று கைகட்டிக்கொண்டு செயலற்று இருக்குமெண்ண த்தை அடியோடு துலைத்து, ஒவ்வொரு விஷயத்திலும் நேராய்ந்து செய்யவேண்டியதை புத்தி பூர்வமாய் தெரிந்துகொண்டு செய்யுங்கால், பயிரிடுவோன் தன்னிலத்தை உழுது பண்படுத்தி விதைவிதைத்து விதைத்ததுமுளைத்து பயனைத்தருவதற்கு மழைக்காக வானைப் பார்த்திருப்பதுபோல நாம் செய்யுங் கருமத்தின் பயனைப்பெறுவதற்கு ஈசனது திருவருளை எதிர்பார்த்திருக்கவேண்டும். "முயற்சிமுந்த திருவருள்பிந்தும்" என்பது நம்மை ஆளும் பிரமாணமாக விருக்கவேண்டும் என்று அவனிடத்திலுள்ள அன்பே நமக்கு போதிக்கும். இதுநிலையே நமக்கு சாந்தத்தை வருவிக்கும். ஆகையால் இச்சிறந்தவன்பை நாம் விடாமுயற்சியுடன் பயிற்சிசெய்யும் விஷயத்தில் நமக்கு ஜெகதீசன் அருள்புரிவாராக.

---

1898ஆம் அக்டோபர் 2உ சாயங்காலம் தென் இந்தியா பிராம்மசமாஜ மண்டபத்தில் ஸ்ரீமதிகள் கூடிய சபையில் சௌபாக்கியவதி மீனாட்சி அம்மாள், நடத்தின உபந்நியாசம்.—

# மனோவெழுச்சிகள்.

---

மானிட ஜன்மம்—என்னும் தலைப்பைப்பெற்ற சென்ற ஜூலை 30உ நடந்த உபந்நியாசத்தால் நமக்குள் ஆச்சரியகரமான பலசக்திகள் உண்டென்று கண்டோமல்லவா? மானிட சுபாவத்தில் இங்கொருபாகம் உண்டு.—

ஏதோ ஒருவஸ்துவை அல்லது செய்கையைக் கண்டவுடன் அல்லது சிந்தித்தவுடன் அன்னியமானவும் கடுமையானவுமான மனோவிகாரம் உண்டாகி உடனே முன்நடந்திருந்த செய்கை நினைப்புமாறி நூதனவுணர்ச்சிகள் கிளம்பி நினைப்பும் செய்கையும் மாறுபடுகின்றன.

சிலசிறிய திருஷ்டாந்தங்களை நோக்குவோம்.

வழிப்போக்கனான ஓர் சாதாரண மனிதன் [illegible] மற்றொருவனை சந்தித்து நிஷ்காரணமாக வாய்க்குவந்தபடி திட்டுகிறான். திட்டப்பட்டவன் மனதில் திரிபுண்டாகி கடினவார்த்தையைச் சொல்லியும் சொல்லுவான், மிதமிஞ்சி புடைத்தாலும் புடைக்கிறான்; இவனுக்கு என்ன நேரிட்டது? ஓர்வித உணர்ச்சி அல்லது எழுச்சிஅல்லவா? இதைகோபமென்கிறோம். இது மற்றொருவனுடைய செய்கையா லுண்டாகி இவனது செய்கையை தூண்டினதாகிறது.

இவனே பட்டினியால்வருந்தி களைக்கும் கதியற்றவழிப்பக்கத்திலிருந்துகொண்டு அழுகிற ஒரு சிறுபையனைக் கண்டதாய் வைத்துக்கொள்வோம். அவன் என்னசெய்கிறான்? உடனே மடியிலிருந்து ஓர்காலணாவாவது எடுத்து அச்சிறுபையனுக்கு கொடுக்கிறான். இவன் செய்தகாரியம் அதிக [illegible]தக்கது அல்லாமற்போனாலும் இருக்கலாம். அவன் கொடுத்ததற்கு அர்த்தமென்ன? அவனில் திரிபுண்டாயிற்றென்று அர்த்தமாகிறது. அவனில் உண்டான வேதனையெழுச்சிக்கு ஆளாகிறான். ஆகையால் இரக்கம் அல்லது பச்சாதாபச் செய்கைக்கு உள்ளாகி சற்று நிமிஷங்களுக்கு முன்னிருந்த மனிதனுக்கு வேறுபட்டவனாகிறான்.

வாயில்வந்தபடி தூர்ப்பாஷை யாடிக்கொண்டும் தள்ளாடிக்கொண்டு வருகிற ஓர்குடியனை அடுத்து இவன் சந்திக்கிறதாகவைத்துக் கொள்வோம். குடியனைவிட்டு விலகி அப்புறம் போவதுமன்றி அவனது ஸ்பரிசம் படாமலிருக்கும்படி அவனை விட்டு விரைவாய்ச்செல்கிறான். ஏன்? நாம் வெறுப்பென்று சொல்லும்படியான மனவெழுச்சி அவனில் உண்டாகிறது அதினால் அவன் அப்படிச்செய்யும்படி நேரிடுகிறது.

ரோட்டில் போய்க்கொண்டிருக்கையில் ரதத்திலூட்டிய இரண்டுபெரிய குதிரைகள் விழுங்கவருமிரண்டு பர்வதங்களைப்போல் வரும்போது வழியில் ஒருவன் இளைப்பிசகாய் அவைகளுக்கு மத்தியில் அகப்பட்டு இப்படி அப்படி ஓடிப்போகாமல்



[illegible] சாரதி சாமர்த்தியமாய் குதிரைகளை விலக்கி அவனுக்கு அபாயம் நேரிடாமல் செலுத்துகிறான். இவ்வேளையில் இவனுக்கு என்ன உண்டாயிற்று? பயமென்பது அவனைப்பிடித்துக்கொள்ள அவன் தன்னை மறந்தவனானான்.

இவ்வொருவனே வீட்டுக்குப்போய் சவுக்கியமாக போசனஞ்செய்துவிட்டு ஆயாசம்தீர உட்காரலாமென்று போகிறான், போனவிடத்தில் வீட்டில் குழந்தைக்கு திடீரென்று பிராணாபாயமான ஓர்நோய்கண்டு வேதனைப்படுகிறது, வைத்தியரோ தூர ஊரிலிருக்கிறார். பசியையாவது முன் வழியில்பட்ட கஷ்டத்தையாவது பார்ப்பானோ? வெகுசீக்கிரம் வைத்தியரிடம் ஓடி அவரை அழைத்துவருவதே நோக்கமாய் ஓடுவான். ஓடும்வழியில் பணங்கொடுக்கிறேன் நில்லென்றாலும் நிற்பானோ? இங்கு இவனுக்குண்டானதென்ன? அன்பு. அன்பின் பெருக்கத்தால் இவன் இன்னும் அதிகமாக தன்குழந்தைக்கு வேண்டியதைச்செய்வான்.

இவ்வொருவனே ஒருநாள் இரவில் வீட்டிற்குவரும்போது ஆகாயத்தைநோக்கிப் பார்க்கும்போது நிர்மலமான ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கவும் எப்பக்கம் பார்த்தபோதிலும் யாதொரு சப்தமும் கிடையாமல் நிச்சலமாயிருப்பதைக் காண்கிறான். அண்ணாந்து பார்க்கும்போது நட்சத்திர மண்டலத்தையும் தாண்டி அப்புறம்போகிற பெருவெளியைப் பார்க்கும்போது ஆ! இந்தப்பிரபஞ்சம் ஆச்சரியகரமும் அகண்டமுமாயிருக்கிறது என்கிற நினைப்பு அவனில் உண்டாகிறது. இந்நினைப்பின் வழியே தொடர்ந்துபோம்போது அவைகளை யுண்டாக்கி காத்துவருகிற கடவுளிடத்தில் போம்போது அவனில் ஓர் வியப்பும் பக்தியும் உண்டாகி தன்னிலிருக்கும் இழிந்த குணங்களையும் கவலைகளையும் மறந்து தன்னைச்சூழ்ந்தும் மேலும் பரிபூர்ணமாக உள்ள ஏகவுருவாய்க்கிடக்கிற பொருளுக்கும் தனக்குமுள்ள அதிரகசிய சம்பந்தம் தன்னில் உண்டாகிறது.

இவ்விதமான திருஷ்டாந்தங்கள் அநேகமாய் கொடுக்கலாம். ஒவ்வொருவரும் சிந்திக்கையில் தனக்கே இவ்வித அனுபவங்கள் வெளியாகும். நாமெல்லோரும் ஏதோவொருவிதமனோ

திரிபுக்கு உள்ளாய்க்கொண்டேயிருக்கிறோம். எல்லாத் திரிபுகளைப்பற்றி இங்கு விவரிக்கவேண்டிய அவசியமில்லை. அவைகளில் சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டி அவைகளுடைய ஆளுகைக்கு நாம் எவ்வளவுக்கு ஆளாயிருக்கிறோமென்று பிரஸ்தாபிப்பதே போதுமானது. பயம், நன்னம்பிக்கை, விருப்பு, வெறுப்பு, பகை, நட்பு, ஆசை, அசூயை, வியப்பு, அலக்ஷியம், ஆகிய இவைகளால் நமது எண்ணங்களும் செய்கைகளும், உண்டாகி பேதப்படுகின்றன.

மேற்குறித்த மனோவெழுச்சிகளைப்பற்றி சிலவிஷயங்களை கவனிப்போமாக.—

பசி, தாகம், உறக்கம் முதலியவை அளவுகடந்தபோது கெடுதிசெய்வதுபோலவே கோபதாப முதலிய மனோவெழுச்சிகளும் எல்லைமீறும் கைக்கொண்டு கெடுதிசெய்தவற்கே இசைந்திருக்கின்றன. மனோவெழுச்சிகளில் ஏதேனுமொன்றுக்கு நாமெவ்வளவுக்கு ஆளாகிறோமோ, அவ்வளவுக்கு நமக்குள்ள பாகங்களும் சக்திகளும் பலவீனப்படுகின்றன. கோபிஷ்டி இரக்கமுள்ளவனும் இவ்விருவரும் வெவ்வேறு குணமுடையவர்களானாலும் ஒவ்வொருவனும் ஒவ்வொரு மனோவெழுச்சிக்கு ஆளாயிருக்கிறானென்பதில் ஒத்திருக்கிறார்கள். இரக்கமுடையான் தன்னுணர்ச்சியை நியாயவெல்லைக்கடந்துபோக விடுவானானால் தப்பிதங்களுக்கு உள்ளாகி பெருந்துன்பத்தை விளைவிப்பான். கோபிஷ்டியும் கோபத்தை அடக்காமற் போவானானால், சிறுபிசகுகளிலிருந்து பெருங் குற்றங்களுக்கு உள்ளாவான். இவ்வாறே மற்றெவ்வித மனோவெழுச்சியும், அது எவ்வளவு சிறந்ததாயிருந்தபோதிலும் மட்டுகடந்து நம்மை யாளும்படி விடலாகாது. மனோவெழுச்சிகளும் தேகத்திற்குரிய பசிதாகம் முதலியவும் நமக்குள் பதுங்கியிருக்கும் ஊற்றுக்கண்கள் போலாம். எந்தவிஷத்திலாவது ஊற்றிலிருந்து வெளியாகி ஒருக்கால் இப்படியும் மறுக்கால் அப்படியுமாக நம்மை அலைக்கழிக்கும். இவைகளை அடக்கி ஆண்டு அவற்றால் பயனைப்பெறுவதுண்டே அதுவெகுகஷ்டமானவேலை. அவைகள் வெகுவேகத்தில் நம்மைமீறிப்போம். அவைகளை எவ்வளவுக்குப் பயிற்சி செய்கி



றோமோ அவ்வளவுக்கு அவைகளுக்கு பலம் ஏறுகிறது. அநேகந் தடவையில், அவைகள் பலம் பெற்றுப்போகவிருந்தால் அவற்றை நாம் ஆளுவதற்குப் பதிலாக நம்மை அவைகள் ஆளத்தலைப்படுகின்றன. ஆற்றாக்கோபம், நிராசசந்தேகம் என்றும் இவைபோல மற்றவைகளைப்பற்றியும் நாம் சொல்லும்போதெல்லாம் நம்மைக்கடக்க வல்லவை மனோவெழுச்சிகளென்பதற்கு இப் பதங்களே சாட்சியாம். ஆகையினால் மனோவெழுச்சிகளுக்கு எவ்வளவுதூரம் எச்சமயங்களில் நாம் உள்ளாகவேண்டுமென்று ஆலோசிப்பது நமது கடமை. ஆலோசிக்குங்கால் அவைகள் இனத்திலும் பலத்திலும் பேதப்பட்டிருப்பதுமன்றி, யோக்கியதையிலும், தாரதம்மிய முடையவையென்று விளங்கும். சில மற்றவைகளைப்பார்க்கிலும் சிலாக்கியமானவை. அன்னவிதமான அவைகளை நிறுத்து நம்மை ஆளுவதற்கு யோக்கியமுடையவை இவை, நாம் ஆதரிக்கத்தகாதவை இன்னவையென்று கண்டறியவேண்டும்.

மனோவெழுச்சிகள் அவன், அவள், அது, இம்மூவகை விஷயமாக வுண்டாகின்றனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. இம்மூன்றைப்பற்றி உண்டாகும் மனோவெழுச்சிகள் அவரவர்களுக்கு பலவிதமாய்த் தோற்றுகின்றன. மூடன் கண்டு கோபிக்கிற விஷயமே அறிவாளி ஒருவனுக்கு புன்னகைக்கு இடமாகிறது. வெகுளிகளும், கடினசித்தமுடையவர்களும் அழுகிய ரணங்களைக்கண்டு அருவெறுப்புற்று முகத்தை திருப்பிக்கொள்வார்கள். இரக்கமுள்ள தாய்மார்களுக்கோ அவ்விரணங்களைக் கண்டவுடன் நெஞ்சிளக்கம் உண்டாகிறது. நமக்கு தீமைசெய்ய எத்தனிப்பவர்களைக்கண்டு நாம் கோபிக்கிறோம். தன்பிராணனையே கொல்லவந்தவர்களைக் குறித்து, தாங்கள் செய்வது இன்னதென்று தெரியாத இந்த நிர்மூடர்களை மன்னியும் என்றுதாய் பிரார்த்தித்த மகாத்துமாவும் உண்டு. ஒருவன் பயப்படுகிற வஸ்துவையே மற்றொருவன் அலட்சியம் பண்ணுகிறான். இதே மாதிரிதான் அன்பின விஷயமும். நமக்கு நன்மைசெய்பவர்களையோ அவர்களையே நாம் சாதாரணமாய் விரும்புகிறோம். நமக்கு கெடுதி செய்பவர்களுக்கும் நன்மைசெய் [illegible]

ங்கள் போதிக்கின்றன. இது அசாத்தியமென்று எத்தனை பேருக்கு தோன்றியிருக்கிறது; இருந்தும் தம்மைக் கொல்லவந்தவர்களுக்கும் நன்மைசெய்த உத்தமபுருஷர்கள் உண்டாயிருக்கிறார்கள். இக்காரணங்களால் மனோவெழுச்சிகள் நம்மைமயக்கி மிதமின்றி ஆளுகின்றனவென்றாவது தகாதவிஷயங்களிற்செல்கின்றனவென்றாவது வெளியாகிறதல்லவா. ஆகையினாற்றான் ஆழ்ந்தசிந்தனைக்கும் அவசியம் நேரிடுகிறது.

இராகாதி துவேஷங்கள் நமக்குண்டாவானேன்? என்கிற கேள்வி மருட்டத்தக்ககேள்வி, மிதாகம் இராகாதி துவேஷங்கள் ஆகிய இவைகள்நமது துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்கும் காரணமாயிருக்கின்றன. ஆயினும், இவைகளால்பயனில்லாமற் போகவில்லை; பிரயாசைகளினால் அதிக பிரயோசனமுண்டு. கஷ்டத்தினால்மாத்திரம் நாம்பிரயாசைப்பட்டு அவைகளை வெல்லப்பார்க்கிறோம். கஷ்டங்களோடு செய்யும் போராட்டத்தினால்தான் நாம் பலமுள்ளவர்களாகவும் சிறந்தவர்களாகவும் ஆகிறோம். தீமைக்கு உள்ளாகாதவர்களாயிருந்தால், நன்மையை செய்தோமென்கிற பெருமைக்கு நாம் உரியவர்களாயிருப்பது எங்ஙனம்? நன்மையேசெய்பவர்களாய் நாம் படைக்கப்பட்டிருந்தால் காலத்தை பிசகாமல்காட்டும் திறமையாய்செய்யப்பட்ட கடியாரத்திற்கும் நமக்கும் யாதொரு பேதமுமில்லாமற்போம்.

மேலும் அல்ப இனத்தைச்சார்ந்த சிறு மனோவெழுச்சிகள் தம்முடைய அத்துமீறுதலையில் காரியங்களுக்கு உதவிபுரிகின்றனவாயிருக்கின்றன. அந்நோக்கைக்கொண்டு சிலவற்றை இங்கு பிரஸ்தாபிப்போமாக.

பயங்காளிகளைக்கண்டபோது அவர்களைப்பற்றி நாம் சற்று இழிவாக எண்ணப்பழகியிருக்கிறோம். ஒருக்கால் அவர்கள் இழிவாக எண்ணப்படாமற்போனாலும், அவர்களிலுள்ள பயம் தங்கள் பலவீனத்தைக் குறிக்காமற் போகாது. (பயம்வேறு கோழைத்தனம் வேறு)

தீரபுருஷன் எவனென்றால் எப்போதும் அஞ்சாதவனல்ல, அஞ்சியும் அபாயம் சேர்ந்தபோது அபாயத்தை நீக்குவது தன்


114871

கடமையாயிருக்கும்போது அதை வெல்லத் துணிபவனே அவனே தீரன். அபாயம் இன்னதிருக்கிறது என்று எச்சரிக்கத்தக்க பயம்; அதுவொழிவில் அது பிரயோஜனமுள்ளதுதான். அபாயமில்லாதவிடத்திலும் அபாயமுண்டென்று பயப்படுவது கூடாது. எச்சரிப்புடன் அதின் வேலை முடிந்துவிட்டது. பிறகு செய்யவேண்டியதைசெய்யாதிருப்பது கோழைத்தனம்.

நமக்கு கோபமூட்டத்தக்கது ஏதேனோ அதோடு நாம் சண்டைசெய்கிறோம். கோபமூட்டத்தக்க பலவிஷயங்களில் சிலவற்றை கூடியபலத்துடன் எதிர்க்க வேண்டியது நல்லகாரியம்; நல்லபயிற்சி பெறாத நாயானது பகுப்பில்லாமல் வீட்டில் நுழைந்தவர்கள் பேரிலெல்லாம் விழுவதுபோல் கோபமானது தகாத காலத்திலும், தகாத விஷயங்களின் பேரிலும் பாயும். நல்ல உத்தேசியத்தைக்கருதி கோபிக்கவேண்டிய விஷயத்தில் கோபிப்பது நல்லகாரியம். காரணமில்லாமலாவது கெட்ட விஷயத்திலாவது கோபிப்பது அடாதகாரியம்.

பொறுமை, இறுமாப்பு, சந்தேகம், மனக்கொதிப்பு இன்னுமிவைபோன்று சொல்லக்கூடிய உணர்ச்சிகள் இருக்கின்றனவே; இவை நம்மில் உண்டாவதற்கு காரணமென்ன? இவ்விதவெழுச்சிகள் அநேகம் உண்டு. அவைகளெல்லாம் தேகசவுக்கிய குறைவாலுண்டாகும் நோய்களென்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது; சரீரம் நோய்கொண்டு அதில் துர்மாமிசம் உண்டாகுமாறு இவ்வித மனோவெழுச்சிகள் உண்டாகலாம். நோய்கள் தாய்தந்தையர் மூலமாயும்வருவதுபோல இக்குணங்களையும் கருவில் அமைப்பாகவே கொள்ளலாம்.

நற்கோரிக்கை, இரக்கம், அன்பு, இவைபோன்ற மனோவெழுச்சியினால் இன்னபிரயோசனமென்று இங்கு எடுத்துக்காட்டுவது அகாலியம். கூடுமானால் இவ்வித குணங்கள் உலகத்தினின்று நீங்கினவாக பாவியுங்கள். உலகம் என்ன கதியிலிருக்குமென்று நீங்களே யூகித்துக்கொள்ளலாம்.

கடைசியாக ஒன்றுக்கொன்று பேர்விரோதமாக இணை இணையாகடக்கும் எழுச்சிகளின் குணநிசயங்களை நன்றாய் நோக்கிப்பாருங்கள்.

ஓர்புறம் பயம், கோபம் வெறுப்பு, அலக்ஷியம், இவைகளும் நம்மை இதரரிடத்திலிருந்து பிரித்து விரோதம் செய்கின்றன. மறுபக்கம் நம்பிக்கை, இரக்கம், அன்பு, அச்சம் இவைகள் இதரரோடு கூட்டி நெருங்கிய சம்பந்தத்தை யுண்டாக்குகின்றன. சத்துரு மித்துருத்தன்மையுடைய இம்மனோவெழுச்சிகளின் சுபாவங்களை நன்றாய் அறிவோமானால் அவற்றில் நாம் கொள்ளவேண்டியவை இன்னவென்றும், விலக்கவேண்டியவை இன்னவென்றும் நமக்கு நன்றாய்த்தெரியும். இவ்வாறுதெரிந்து அவைகளை ஆண்டு பயனடையவேண்டுமென்பதே சிருட்டிகர்த்தாவினுடைய உத்தேசியமென்று விளங்குகிறது; ஆகையால் இழிகுணத்தைச்சார்ந்த கோபதாபமுதலிய மனோவிகாரங்களைக் குன்றாகாமலும் உயர்குணத்தைச் சார்ந்த அன்புமுதலிய சிறந்தகுணங்கள் நம்மில்வளர்ந்து இகபரசுகங்களை நாமடையும்படி ஜெகதீசனருள்புரிவாராக.

---

தென் இந்தியா பிராம்ம சமாஜ மண்டபத்தில் 1899ளு ஜனவரி மீ 28உ சாயங்காலம் ஸ்ரீமதிகள் கூடியசபையில் சௌபாக்கியவதி மாணிக்கம்மாள், பிரமானந்தயோகி கேசவ சந்திரசேனர் செய்த பிரபந்தத்திலிருந்து வித்தியாபிவிர்த்தி முறையைப்பற்றி வாசித்தது.

## வித்தியாபிவிருத்தி முறை.

இல்லறத்தார் இராத்திரி போஜனத்திற்கு முன்பாவது, அல்லது போஜனம் செய்தபின்பாவது சாவகாசமான காலமிருக்கில் அப்போது நல்லபுத்தகங்களையாவது அல்லது சமாசாரப் பத்திரிகைகளையாவது வாசித்தல்வேண்டும்.

2. ஸ்தூல தேகதாருட்டியத்திற்கும், ஆத்துமோன்னத விருத்திக்கும் பழக்க பயற்சி எப்படி அவசியகமோ; அப்படியே, மனோவிருத்தி முயற்சிக்குக் கல்வி விருத்தியும், அநுபவமும் இன்றியமையாதனவா யிருக்கின்றன. உண்மையாகவே



இவ்விதமான சாதனத்தாலத்தான் சக்தியும், சத்தியமும் விருத்தியாகி ஞானவிருத்தி யடைவதற்கு ஏதுவாயிருக்கிறது.

3. வாசிக்கும் கிரந்தங்கள் உபயோகமுள்ளவைகளாகவும், [illegible] நீதியைக் கெடுக்காதவைகளாகவும் இருத்தல் வேண்டும்.

4. சத்கிரந்தங்கள், சாதுஜன சிநேகிதர்களைப்போலவிருக்கின்றன. கெட்டபுத்தகங்கள் இருதயத்தையும், புத்தியையும் கெடுத்துவிடும். நல்லபுத்தகங்கள் ஞானிகளைப்போல விருந்துபசரித்து ஞான பலனைத் தருகின்றன.

5. உண்மையாகவே ஞானநூல்கள் ஆத்துமோன்னதஸ்திதியை விருத்தியாக்கும் உத்தம குருமார்களைப்போலவும், ஏகாந்தமான காலத்தில் உத்தம தோழர்களைப்போலவுமிருந்து உதவுகின்றன.

6. புத்தகங்களுக்கு பேசும் சாதனங்களாகிய உதடுகளும் நாவுகளுமில்லையாயினும், உத்கிருஷ்டமான புத்தியைப் போதிக்கின்றன; மேலும், நல்லகிரந்தங்களுக்கு கரங்களில்லாதிருந்தும் அவைகள், வியாகுலத்தினால் வருந்திக் கண்ணீர் விட்டழுபவருடைய துக்கத்தைப் போக்கிக் கண்ணீரைத் துடைக்கின்றன.

7. ஆகவே, இல்லறத்தார் தங்கள் வீடுகளில் நல்லபுஸ்தகசாலை ஒன்று ஸ்தாபித்து நாளாவட்டத்தில் தம் தம் சக்திக்குத்தக்கபடி அதில் நல்ல புத்தகங்களை வாங்கிவைத்தல் வேண்டும்.

8. வீட்டில் ஸ்தாபிக்கும் புத்தக சாலையானது சிறியதாகவும் பலகாலங்களில் பலவித ஞானாசாரியர்கள் இயற்றிய சத்கிரந்தங்களுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

9. தேக போஷணைக்கு இன்றியமையாத போஜனத்தை நாளுக்குநாள் பலவித ருசிபாகங்களாகச் செய்து உண்டு உல்லாசமாக வாழ்வதைப்போலவே; மனோவிருத்திக்கு இன்றியமையாத போஜனமாகிய படிப்பும் பலவித ருசிபாகங்களைப்போல விதம் விதமானவைகளாகவும், நவநவமானவைகளாகவும் இருத்தல்வேண்டும்.

10. இல்லறத்தாருடைய புத்தகசாலையில் சாஸ்திரங்களும், வித்தியாவிருத்தி விஷயமான கிரந்தங்களும், வைத்திய நூல்களும், தத்துவ நூல்களும், சரித்திரங்களும், காவியங்களும் நாடகங்களும், நீதிநூல்களும், யாத்திரைச் சரித்திரங்களும், உபந்நியாஸங்களும், உபாசனா கிரந்தங்களும், உலகத்திலுள்ள ஒவ்வொரு மதஸ்தருடைய வேதங்களும் வாங்கி வைத்திருத்தல் வேண்டும்.

11. இல்லறத்தார் தமது வீட்டின் புத்தகசாலையிலிருக்கும் புத்தகங்களைப் பரிபாலித்தும், பிரியமாகப் பாதுகாத்தும் பிராண போஷகமான பொக்கிஷத்தைப்போல் ஜாக்கிரதையோடு காத்தும், பரமேசுவரருடைய பிரபாவத்தைப் போதிக்கும் பரிசுத்தமான பரமாசாரியர்களைப்போல கவுரவப்படுத்தல் வேண்டும்.

12. சத்கிரந்தங்களில் காணும் சத்தியங்கள் யாவும் சர்வ சுவாமியாகிய பரமேசுவரருடையதாக விருக்கின்றன; ஆகவே, நீதிநூல்களும், சரித்திரங்களும், சாஸ்திரங்களும், சர்வேசுவரருடைய மகிமைப் பிரபாவத்தை வெளியாக்கும் சத்திய சாதனங்களாகிறபடியால் அவைகளை பரிசுத்தமானவைகளாகப் பாவித்து கவுரவப்படுத்தல் வேண்டும்.

13. இல்லறத்தாருடைய படிப்பு அளவுக்கு மிஞ்சாமல் மிதமாயிருத்தல் வேண்டும்.

14. அளவுக்கு மிஞ்சின படிப்பானது (அளவுக்கு மிஞ்சி உண்பவர் எப்படி ஆயாசம் அஜீரண முதலானதுகளால் வருந்துவார்களோ அப்படியே) கெடுதியை விளைவிக்கும்.

15. அளவுக்கு மிஞ்சி உண்ணும் உணவானது ஜீரணமாகாமல் விஷமாகி அஜீரணம் முதலான வியாதிகளை யுண்டாக்குவதைப்போல்

16. அளவுக்குமிஞ்சி அதிக புத்தகங்களைப் படித்தால் மனது சிக்குமுக்கலான சஞ்சலத்தில் சிக்குண்டு மூளை முதலான கருவிகளைக்கெடுத்து ஸ்திர புத்தியை நாசமாக்கி விடும்.

17. உண்மையோடும், கருத்தோடும், வாசிப்பவர்கள்: பிரதிதினமும் சிலவரிகளையாவது அல்லது சில அத்தியாயங்க



ளையாவது இலக்ஷணமாக வாசித்து வேறு விஷயங்களைப் படிப்பதற்கு முன், முதலில் படித்தவைகளை ஜீரணமாக்குவதைப்போல மனதிற்பதியச் செய்துகொள்வார்கள்.

18. மேலும் அதிகமாகப் படிக்கவேண்டுமென்றும், அதிகமாய்க் கற்கவேண்டுமென்றும், அதிகமாக ஆராய்ச்சி செய்யவேண்டுமென்றும் பேராசைப்படாமல், தேகஸ்திதிக்குத் தக்க கல்விஞானத்தை விருத்தியாக்க விடாமுயற்சி செய்யல்வேண்டும்.

19. படிப்பதின் பலனெல்லாங் கூடி பல விஷயங்களையறிந்து ஆநந்தப்படுவதற்கென்று எண்ணாமல் "கல்வியைக்கல், கற்றபடி நில்" என்னும் பழமொழிக்கொக்க நல்ல மார்க்கத்தை யனுசரித்து புத்தியை தீக்ஷணியப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

20. வாசிக்கப்பட்ட ஒவ்வொருவிஷயத்தைப் பற்றியும் புத்தி பூர்வமாக யோசித்தும் தர்க்க சித்தாந்தத்தின்படி நிதானித்தும், சமரசமாக்கியும், பொதுவிதிக்குள்ளமைத்தும், விபாகித்தும், தொகுத்தும், உண்மையான விதிகளால் விரித்தும், யுக்திக்கும் அநுபவத்துக்கும் பொருத்தியும், தெளியவேண்டும்.

21. அகன்ற கடலைப்போன்ற பல புத்தகங்களைப் பற்றும் உண்மையையறியாமல் வாசிக்கப்பட்டவர்கள், [illegible] ற்றி கரையையடைய விரும்புவானைப்போல ([illegible] வல்லவர்கள்) வியாகூலத்தை யநுபவிப்பார்கள்.

22. மேலுக்கு மேலாகவும், யோசனையில்லாமலும் பல புத்தகங்களைப் படிப்பதனால் பிரயோஜனமேயில்லை. புத்திமான்கள் பத்து பன்னிரண்டு வார்த்தைகளுக்குள்ளாகவே பிரபஞ்ச ஞானத்தையுடையவராகின்றனர்.

23. படிப்பதினால் இளைப்பாகிவிட்டதென்றும், அல்லது வருத்தாப்பியமாகி விட்டதென்றும் அசட்டை செய்யாமல் "பாடையேறினும் ஏடது கைவிடேல்" என்னும் பழமொழிப்படி [illegible]ழில் உள்ள நாள் உள்ள வரையில் கற்க முயல

24. பரமகுருவான பரமேசுவரனைப்பற்றி சதா வாசிப்பதே ஜன்மத்துக்குப் பெருமைக்குரியதாயும் பாக்கியமுமாயிருக்கிறது.

25. இந்தப் பிரபஞ்சத்தில் ஜனிக்கப்பட்டவர்கள் யாக்கும் திவ்யமாகிய பாடசாலையில் படித்துப் படித்து ஞானப் புத்தகங்களில் தேர்ந்து அந்த விலையற்ற வெகுமானம் அல்லது பரமபதமாகிய மோக்ஷலோகத்திற்போய் அநுபவிக்க வேண்டியவர்களாக எண்ணல்வேண்டும்.

26. சிருங்காரலங்காரமான இரகசியங்களை வாசிப்பதனால் இருதயத்தைக் கெடுத்து மனதைப் புத்திப்பாஷாணையிலிருந்து மாய மயக்கத்துவத்தில் மடியச்செய்துவிடும்.

27. கட்டுக்கதைகளை வாசிப்பவர்கள் நிழலையுண்மையெனத் தரிக்கும் பிரபஞ்சத்தில் வசிப்பவராவார்கள்.

28. அசங்கியமும், அபரிசுத்தமுமான நூல்களை கரங்களால் தொடவும் வேண்டாம்.

29. நாஸ்திக புத்தகங்களைக் கண்டால் அருவெறுத்து பயங்கரமானவைகளாக பாவித்தல் வேண்டும்.

30. ஓ! இல்லறத்தார்களே! கேவலம் பிராணிருதேகத்தின் பொய் சுகத்திற்காக பரமேசுவரனை மறுத்துக் கிழிக்கும் நூல்களை பரிசுத்தமான இரகதாச்ரம இரத்தசாலையில் வைத்தல் தகுந்ததாகுமா?

31. இல்லறத்தாரில் ஒருவன் ஒரு நாஸ்திக பத்திரிகையை வாசித்தான் என்றால் இருபது நாஸ்திக புத்தகங்களைப் படிக்க முயல்வார்கள், இப்படியே அபரிசுத்தமான அஞ்ஞானம் பரவும்.

32. ஆகவே, நாஸ்திகமதவிஷயமான எவ்வித நூலையும் பரமேசுவரருக்கும் பாகவதர்களுக்கும் விரோதமான அபரிசுத்தமானவைகளாக எண்ணி அவற்றின் நிழல்படவும் நிற்காதே.

33. எல்லாவிதப் புத்தகங்களைப் பார்க்கிலும், எல்லாதீர்த்தரிஷிகள் அல்லது மதாசாரியர்களுடைய சரித்திரங்களே பரிசுத்தமானவைகளாகக் கவுரவப்படுத்தல் வேண்டும்; ஏனெனில், இவ்விதமான ஞான நூல்களில்தான் பரமேசுவரருடைய திவ்ய ஞானம் பிரகாசிக்கின்றது. அவைகளை அன்னியமத நூல்களாக எண்ணி அசட்டை செய்யாமல் சமரசமாக கவுரவப்படுத்தல் வேண்டும்.

34. ஓ! இல்லறவாசிகளே! நீங்கள் படிக்கும் படிப்பெல்லாம் பரமேசுவரருடைய பரிசுத்த மதமாகிய ஆஸ்திகத்தைப் பிரபலப்படுத்த பிரயத்தனஞ் செய்வதாக,